சர்வேத் துறை

*227 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரெவின்யூ டிபார்ட்மெண்டில் வேலை பார்க்கும் சர்வேயர்களை வேலையிலிருந்து நீக்குவதற்கான உத்தரவு போடப்பட்டிருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. என். சங்கரய்யா : சர்வே இலாகாவில் வேலை செய்யக்கூடியவர்கள் அந்த வேலையை இப்பொழுது புதியதாக நல்ல முறையில் நடத்திக் கொடுக்கக்கூடிய விதத்தில் அந்த இலாகாவை துரிதப் படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதற்கான நடவடிக்கை எடுப்பது பற்றி ரெவின்யூ போர்டு பரிந்துரைகளை வழங்கியிருக் கிறது. இந்தத் துறையின் தலைமை நிலையத்தை மாற்றி அமைப்ப தற்கும், ரெவின்யூ போர்டு நேரடி நிர்வாகத்தில் இல்லாமல் டெபுடி டைரக்டர் ஆப் சர்வே அண்டு லேண்ட் ரிகார்ட்ஸ் என்ற அதிகாரியின்கீழ் இந்த அலுவலகம் செயல்படுவதற்கும் பரிந்துரை கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதன்மீது நடவடிக்கை எடுக்கப் படும்.

குடும்பக் கார்டு முறை

*228 வினா.—திரு. ஏ. அ. சுப்பராஜா : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு விநியோகம் சம்பந்தமாக, நமது மாநிலத்தில் சில கிராமங்களில் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டும், சிலவற்றில் வழங்கப்படாமலும் இருப்பதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரிசி பற்றுக்குறையாக உள்ள பகுதிகளுக்குப் போதிய அளவில் அரிசியைத் தவறாமல் அனுப்பிவைத்து அங்குள்ள மக்களுக்குக் குறைந்த அளவு அரிசி யாவது நியாயவிலைகளில் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத் துடன்தான் அரசு குடும்பக் கார்டு முறையைத் தொடங்கியது. அத்தகைய பற்றுக்குறைப் பகுதிகளில் வாழும் மக்கள் வணிகர் களின் தயவில் இருக்க வேண்டிய நிலை இந்த ஏற்பாட்டின் மூலம் நீக்கப்படுகிறது. அத்துடன் வணிகர்கள் தங்கள் விருப்பம்போல் விலைகளை உயர்த்துவதற்கான வாய்ப்பும் தவிர்க்கப்படுகிறது. வெளிச் சந்தையில் போதுமான அளவிற்கு அரிசி கிடைக்காத பகுதிகளில் மட்டுமே குடும்பக் கார்டு முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அரிசி உற்பத்தி உபரியாகவும், மக்கள்

தங்களுக்கு வேண்டியதை வெளிச் சந்தையில் தாராளமாக வாங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும் உள்ள பகுதிகளில் குடும்பக் கார்டு முறை தேவையில்லை.

திரு. தோ. மு. நல்லசாமி : பொதுவாக எல்லாக் கிராமங்களிலும் இருப்பவர்கள் நிலம் உடையவர்கள் அல்ல. கூலி வேலையில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும், இதர துறைகளில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும் அரிசி தேவைப்படுகிறது. அந்தப் பகுதிகளிலெல்லாம் இந்தக் குடும்பக் கார்டு முறை இல்லை. வேறு என்ன மாற்று யோசனையை அரசாங்கம் வைத்திருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாகக் குடும்பக் கார்டு முறையிலே விவசாய உற்பத்தி இல்லாத, உபரி மாவட்டங்கள் அல்லாத மாவட்டங்களில் ஓரளவுக்குக் குறைந்தபட்ச அளவுக்கு வெளிச்சந்தையில் இருக்கிற விலை ஏறிவிடாமல் கட்டுப்படுத்துவதற்குத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1 கோடி 23 லட்சம் பேர்கள் இந்தக் குடும்பக் கார்டு பலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது இந்த எண்ணிக்கைக்கும் மேலே இருக்கிற விவசாயப் பகுதிகளில் வாழும் மக்களுடைய நிலைமையைப் பொறுத்தது. இந்த அளவுக்கு மட்டுமே இப்பொழுது அரசாங்கம் இந்தப் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : குடும்பக் கார்டுகள் வழங்குவதில் மாதம் ஒன்றுக்கு எவ்வளவு அரிசி விநியோகம் செய்கிறார்கள் ? எந்தெந்த ஊர்களில் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது மிகப் பரந்த ஒரு கேள்வி. அங்கங்கே ஸ்டாக் எப்படி எப்படி இருக்கிறதோ அதற்குத் தகுந்த மாதிரியாக அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் விநியோகம் செய்யலாம். அதற்கு அரிசி ஒதுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : உணவு உற்பத்தி செய்யக்கூடிய பகுதிகளாக கிராமத்தை அணைத்தாற்போல் இருந்தாலும் அறுவடை காலத்தைத் தவிர மிச்ச காலத்தில் நிலச் சொந்தக்காரர்களாக இல்லாதவர்கள், கூலிவேலை செய்யக்கூடியவர்கள் அரிசி கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை என்னுடைய அனுபவத்தில் சொல்கிறேன். அபேர்ப்பட்ட நிலையில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கருவதை அடுத்து மற்ற இடங்களில் அமல் நடத்துவதற்கு முன்னால், இந்தக் குடும்பக் கார்டுகளை இப்படிப்பட்டவர்களுக்கு அளித்து விட்டு பிறகு அந்தத் துறையில் போக ஏற்பாடு செய்யுமா என்பதை மந்திரி அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினர் அவர்களுடைய கேள்வி அதோடு ஒட்டியதுதான். இன்றைக்கு இருக்கிற நிலைமையில் சர்க்காருடைய கொள்முதலை இன்னும் துரிதப்படுத்தி, 8 லட்சம் டன் என்பதை இந்த மன்றம் முன் வருமானால் 16 லட்சம் என்ற அளவிலோ, கொள்முதல் முழுவதையுமோ அரசாங்கத்திற்கே கொடுப்பதற்கு முன்வருவார்களேயானால் அங்கத்தினர் அவர்களுடைய கோரிக்கையை மிக எளிதாக நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. கே. என். குமாரசாமி: பகிரங்க மார்க்கெட்டில் விலை ஏறுவதைத் தடுப்பதற்குத்தான் அரசாங்கம் குடும்பக் கார்டுகள் மூலம் அரிசியை விநியோகம் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறது என்று சொல்கிறார்கள். பகிரங்க மார்க்கெட்டில் விலை ஏறியும்கூட, குடும்பக் கார்டுகள் விநியோகம் செய்யப் படாமல் இருந்தால், ஏழை மக்கள் எப்படி குறைந்த விலைக்கு வாங்குவார்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: குடும்பக் கார்டு முறை என்பது முழுமையான ரேஷன் முறையல்ல, சட்டப்பூர்வமான ரேஷன் முறையல்ல. வெகு வேகமாக வெளிச் சந்தையிலே விலை ஏறுமுகமாக ஏறிவிடக்கூடாது, அப்படிப்பட்ட நெருக்கடியை சமாளிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இன்பார்மல் ரேஷனிங் என்ற முறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கெ. இர. ஞானசம்பந்தன்: உபரி மாவட்டமாகிய தஞ்சையில் நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற பல இடங்களில் அரிசி கிடைக்கவில்லை என்று அதிகாரிகளுக்கு மனு எழுதியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரிசி கிடைப்பதற்கான ஏற்பாட்டுக்கு உத்தரவாதம் இல்லை. இதுபற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா: கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு விவசாயக் கூலியை தானியமாகத்தான் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம்.

திரு. இரா. மாணிக்கவாசகம்: கோவை மாவட்டத்தில் உணவுக் கட்டுப்பாடு கொண்டுவந்தும் விலை ஏறியிருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா?

1967 ஜூலை 10]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கத்தினர் சொல்கிற அளவுக்கு விலை ஏறவில்லை என்ற தகவல்கள்தான் கிடைத்திருக்கின்றன.

திரு. இல. பலராமன்: பெரிய நகர்புறங்களை அணைத்தாற்போல் உள்ள கிராமங்களில் இதுவரையில் குடும்பக் கார்டுகள் வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த கிராமங்களில் நகர்புறங்களில் வந்து வேலை செய்கின்ற கூலிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு அரிசி கிடைப்பதில்லை. இதைப் பரிசிலித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி ஒரு கோடி 23 லட்சம் பேர்களுக்கு குடும்பக் கார்டுகளை விநியோகம் செய்திருக்கிறது. இந்த அளவில் இந்த முறையை செம்மைப்படுத்துவதற்கே இன்னும் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. அதோடு சமீபத்தில், கொடுக்கிற ரேஷன் அளவைக் குறைக்கவேண்டும் என்று மத்திய சர்க்கார் வேறு தாக்கீது அனுப்பியிருக்கிறது. இதன் காரணமாக இந்த முறையை விஸ்தரிக்கும் நோக்கம் இப்பொழுதில்லை.

திரு. டி. மார்டின்: தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம், கிராமத்திற்குக் கிராமம் இந்த நிலை மாறுபட்டு இருப்பதை உத்தேசித்து சிற்சில இடங்களில், உதாரணமாக நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடி சப் தாலுகா கிராமங்களுக்கு ரேஷன் வழங்கி அதைவிட பின்தங்கிய பகுதியாகிய சாத்தான்குளம் பகுதிக்கு ரேஷன் வழங்காமல் இருப்பது நியாயமா என்று கேட்கிறேன். மு.ப. 9-30

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நியாயம், அநியாயம் என்று எழவில்லை. அவ்வப்பொழுது நிலைமைகள் ஆராயப்பட்டு, தக்க நடவடிக்கை கலெக்டர்கள் எடுத்து நிவாரணம் கொடுக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM: Apart from the statutory rationing in the City of Madras and Coimbatore, informal rationing has been introduced in the belt areas and industrial areas. Why should there be any invidious distinction between village and village? In some villages in the informally rationed areas family cards have been given, whereas some villages have been wantonly neglected. What is to happen to the people in the neglected villages and why should they be left to get rice in the open market or blackmarket?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: If it is brought to the notice of the Government, the lacuna can be rectified.

திரு. எஸ். ராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த ஸ்டாசுடரி ரேஷனிங் ஏரியாவும், இன்பார்மல் ரேஷனிங் ஏரியாவும் ஏற்கனவே இருந்த சர்க்காரால்தான் ஏற்படுத்தப்பட்டது என்பதனால், அதை

மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்போது, இது இனிமேல்தான் இந்த சர்க்கார் செய்ய வேண்டும் என்பதால், அதில் எந்த விதமான கருத்து வேறுபாடுகளும் இல்லாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்திய சர்க்காருடைய ஆணைக்குட்பட்டு, சில இடங்களை ஸ்டாட்சுடரி ஏரியாவாகவும், மற்ற இடங்களில் இன்பார்மல் ரேஷன் என்றும் முன்னால் சர்க்கார் செய்திருந்தது. அதிலே பெரும்பகுதி மக்கள் கோயம்புத்தூரிலும், சென்னை நகரத்திலும் கிட்டத்தட்ட 30 லட்சம் மக்கள் வருகிறார்கள். அதில் பாரபட்சம் என்றோ அநியாயம் என்றோ எதுவும் இல்லை. நிர்வாகத்துக்குத் தக்கபடி, சில தகுதிகள், சில விதிமுறைகள் இவற்றை அனுசரித்து உட்படுத்தப்படுகிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, சிற்றூர்ப் பகுதிகளுக்கு அரிசி கொடுக்க முடியாவிட்டாலும், கோதுமை, ரவை போன்றவற்றை வழங்க, ஒவ்வொரு ஊராட்சியிலும் நியாயவிலைக் கடை திறக்க ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அரிசியைவிட கோதுமை இன்னும் முயல் கொம்பாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் பதினெட்டு வினாக்கள் இருக்கின்றன. அடுத்த வினா.

பால் அபிவிருத்தித் திட்டம்

* 229 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் பால் அபிவிருத்திக்காக புதிதாக ஏதேனும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) and (இ) சபை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

*230 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் இருக்கும் மொத்த மாடுகள் எத்தனை?

---

* 632-637-ம் பக்கங்களில் II இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.